[9th September 1959

Ayyan channel

* 236 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the total ayacut in the Ayyan channel branching off from the Cauvery at Vathalai in Tiruchirappalli district; and

(*b*) the year when silt-clearance work was carried out last at the heads in Vathalai?

The Hon. Sri P. KAKKAN : (*a*) 18,000 acres.

(*b*) May 1959.

Sri S. LAZAR : சார் இது கடைசியாக 1959 மே மாதம் எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இதை 3 ஆண்டுகள் எடுக்காமலிருந்ததற்குக் காரணம் என்ன ? இம்மாதிரி இனிமேல் ஏற்படாமலிருக்க அலுவலர்களுக்கு அரசாங்கம் தக்க உத்திரவு அனுப்புமா ?

The Hon. Sri P. KAKKAN : வருடா, வருடம் அய்யன் சானலுக்கு ரிபேர் செய்யப்படுகிறது. விசேஷமான ரிப்பேரும் அவ்வப்பொழுது செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

District Employment Advisory Committees

* 237 *Q.*—Sri S. M. ANNAMALAI (On behalf of Sri M. P. SARATHI) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் எந்த எந்த மாவட்டங்களில் **District Employment Advisory Committee**-கள் இயங்கி வருகின்றன ?

(ஆ) இந்த கமிட்டிகளில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார் ?

(இ) உத்தியோகப்பற்று இல்லாதவர்கள் அங்கம் வகிக்கிறார்களா ?

(ஈ) அவர்கள் எந்த முறையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) District Employment Advisory Committees are functioning in the districts of Chingleput, Tiruchirappalli, South Arcot, Tirunelveli, Madurai, Coimbatore, Salem, Nilgiris, Ramanathapuram and North Arcot.

(*b*) The composition of the Committee is as follows :—

Collector of the District—*Chairman*.

One representative of employers.

One representative of workers.

One representative such from the District Board and Local Municipal Committee (nominated by the Collector).

One representative of the District Soldiers Sailors and Airmen's Board, if one is in existence.

One representative each of important Government employing departments, e.g., Public Works Department, Education, Transport, Planning, Police, etc.

Employment Officer of the District—*Secretary*.

(*c*) Yes, Sir.

The representatives of employers and workers are invariably non-officials.

(*d*) The members are nominated by the Government on the recommendation of the Chairman of the Committee concerned, in consultation with the Director of Employment.

9th September 1959]

Sri S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒருவரும் இல்லை என்று தெரிகிறது. எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜில் ரிஜிஸ்டர் செய்து இரண்டு வருஷங்களாகியும் சிலருக்கு உத்தியோகம் கிடைப்பது இல்லை. ஆனால் இன்றைக்குப் போய் ரிஜிஸ்டர் செய்யக்கூடியவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கிறது. வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் நடக்கும் அம்பக்குகளைத் தடுப்பதற்கு வேண்டி இரண்டு மூன்று சட்ட மன்ற உறுப்பினர்களை அந்தக் கமிட்டியில் நியமிக்க சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வதை நான் மறுக்கிறேன். இன்றைக்கு விதிகள் போட்டு பிரயாரிடி பிரகாரம் "சப்மிஷன்ஸ்" செய்ய வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஏதாவது தவருக, முன்னுல் ரிஜிஸ்தர் செய்தவர்களை விட்டு, பின்னுல் ரிஜிஸ்தர் செய்தவர்களை அனுப்புவதாக இருந்தால், அந்தப் புகாரை எழுதி அனுப்பினுல் அதை உடனடியாகக் கவனிக்க சர்க்கார் தயாராக இருக்கிறது. அப்படிச் செய்வது விதிகளுக்கு மாருனது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக தொழிலாளர்கள் விஷயத்தில், தொழிலாளர்களுக்கு இருக்கும் அக்கறையை விட சட்ட மன்ற அங்கத்தினருக்குச் சற்று குறைவாக இருக்கும் என்ற காரணத்தினுல் தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறது.

Sri J. MATHA GOWDER : தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் என்ருல் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : தொழிலாளர் பிரதிநிதிகள் என்ருல் தொழிற் சங்கத் தலைவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சில தொழிற் சங்கங்களிலே தொழிலாளர்களே தலைவர்களாக இருக்கிருர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சில சங்கங்களிலே மற்றவர்கள் தலைவர்களாக இருக்கிருர்கள். அந்தத் தலைவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது.

Sri K. ANBAZHAGAN : வேலை இல்லாதவர்களுக்கு, வேலை பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அக்கறை குறைவாக இருக்கும் என்று அமைச்சர் கூறுவது, சட்ட மன்றத்தின் தகுதியைப் பாதிக்கும் என்று அமைச்சர் கருதவில்லையா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நான் சொன்னதை கனம் அங்கத்தினர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனத்தில், தொழிலாளர்களுக்குச் சரியான வேலை தேடிக் கொடுக்கும் விஷயத்தில், தொழிலாளர் தலைவர்களுக்கு இருக்கும் அக்கறை சட்ட மன்றத்தில் இருக்கும் அங்கத்தினர்களுக்கு இருக்க முடியாது என்றுதான் சொன்னேன். தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தொழிலாளர்களிடத்தில் அக்கறை அதிகமாகத்தான் இருக்கும். சட்ட சபை அங்கத்தினர்கள் தொழிற் சங்கத் தலைவர்களாக இருந்தால் அவர்களுக்கும் கொடுக்கிறேம். சட்ட சபை அங்கத்தினர் என்ற காரணத்திற்காகப் போடுவதில்லை.

Sri K. ANBAZHAGAN : ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாப் பிரச்னைகளிலும் அக்கறை இருக்கும் என்ற நியதி இருக்க, அதோடு எல்லா பிரச்னைகளைப் பற்றியும் முடிவு எடுக்கக்கூடிய பொறுப்பு இந்தச் சட்டமன்றத்திற்குதான் என்று இருந்தும், சட்டசபை அங்கத்தினர்களுக்கு இதில் அக்கறை குறைவாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது சட்டமன்ற அங்கத்தினர்களுடைய தகுதியைக் குறைகூறுவதாக ஆகாதா என்பதை சபாநாயகர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.

Mr. SPEAKER : அமைச்சர் அவர்கள் அவ்வாறு ஒன்றும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே குறிப்பிட்டதாக நான் கூறவில்லை. அமைச்சர் அவர்கள் கூறினதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது சட்டமன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு இதில் அக்கறை குறைவாகத் தான் இருக்கும் என்று குறிப்பிடுவது சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாக ஆகாதா என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இதைப்பற்றி சொன்ன பிறகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதை கேட்டதில் ஒரு தவறு மில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அதற்குப் பிறகும் கனம் அங்கத்தினர் அதைப்பற்றி திரும்பிச் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம் ? I said there was no insinuation.

SRI A. VEDARATHNAM : இந்தக் குழு சில ஜில்லாக்களில் மட்டும் தான் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். மற்ற ஜில்லாக்களிலும் இந்தமாதிரியான குழுக்கள் எப்போது ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தஞ்சை ஜில்லாவிலும், கன்னியாகுமரி ஜில்லாவிலும் தான் இது ஏற்படுத்தப்படவில்லை. வேறு எல்லா இடங்களிலும் அமைத்தாகி விட்டது. இந்த இரண்டு ஜில்லாக்களிலும் எப்போது அவசியமோ அப்போது அமைக்கப்படும்.

Gratuity for workers

*238 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள், என்ஜினியரிங் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சிமிட்டி தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு "கிராஜுடி" கொடுப்பதைச் சட்டமாக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதற்குரிய மசோதா எப்போது கொண்டுவரப் படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Road-rail crossings

239 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ரெயில்வே பாதைகளும், ரஸ்தாக்களும் சந்திக்கும் இடங்களில் ரஸ்தா போக்குவரத்திற்கான மேல் பாலங்களும், கீழ் பாலங்களும் சென்னை ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் கட்டப்படவேண்டும் என்று தெரிவிக்கும் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்குச் சென்னை அரசாங்கத்தார் அனுப்பியிருக்கிறார்களா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. In 1955, a list of 45 road-rail crossings (arranged in the order of priority) to be replaced by over/under bridges was forwarded to the Government of India.